# Deposition of Witness

In the Court of the Principal District Judge, Vellore District.
S.C.No.138 of 2017
Prosecution Witness No.P.W.24 (L.W.48)

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவக்குமார் | Caste | : BC |
| Father's Name | : பா.கண்ணன் | Calling | : Deputy Tahsildar |
| Village | : கம்மசமுத்திரம் | Religion | : Hindu |
| Taluk | : வேலூர் | Age | : 46 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 27.01.2025.

(A1 to A5 present, A6 absent and his absence condoned on filing u/s 317 Cr.P.C. petition)

**முதல் விசாரணை**

நான் தற்போது துணை வட்டாட்சியர் நிலையில் சிறப்பு குற்றவியல் நடுவராக பயிற்சியில் வேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.5 ல் உள்ளேன். ஆஜர் எதிரிகளில் 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ் அவரை சாட்சி அடையாளம் காட்டுகிறார். மற்ற எதிரிகளை தெரியாது என சாட்சி கூறுகிறார்.

05.08.2017 ம் தேதி நான் வேலூர் வட்டம், கீழ்அரசம்பட்டு கிராம நிர்வாக அலுவலராக அலுவலக பணியில் இருந்தபோது, வேலூர் வட்டாட்சியர் தொலைபேசி செய்தி வாயிலாக 06.08.2017 அன்று வேலூர் CBCID அலுவலகத்தில் புலன்விசாரணைக்கு சாட்சியாக செல்லுமாறு தெரிவித்தார். என்னுடன் வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளர் தேவராஜ் என்பவரும் வருவதாக வட்டாட்சியர் தெரிவித்தார்.

06.08.2017 அன்று காலை 10 மணியளவில் வேலூர் ஓட்டேரியில் உள்ள CBCID அலுவலகத்திற்கு நானும், வேலூர் வடக்கு வருவாய்

ஆய்வாளர் தேவராஜ் என்பவரும் ஆஜரானோம். மேற்படி அலுவலகத்தில் காவல்துணை கண்காணிப்பாளர் ஆனந்தகுமார் என்பவர் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டு, வழக்கு எண்.5/2015 ல் நடைபெறும் புலன்விசாரணையில் என்னையும், வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளர் தேவராஜ் அவர்களையும் சாட்சியாக இருக்குமாறு தெரிவித்தார்.

மேற்படி புலன்விசாரணைக்கு ஆஜராகும்போது, காவல்துணை கண்காணிப்பாளர் அளித்த கடிதத்தை வேலூர் வட்டாட்சியர் என்னையும், வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளர் தேவராஜ் என்பவரையும் நியமனம் செய்திருந்த கடிதத்தை எங்களிடம் காண்பித்தார்.

காவல்துணை கண்காணிப்பாளர் கடந்த 06.08.2015 அன்று காலை 11.30 மணியளவில் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ் என்பவரை காவலில் எடுத்து புலன்விசாரணையை வீடியோ பதிவு மூலமாக ஆரம்பித்தார். மேற்படி புலன்விசாரணை ஆரம்பித்த நேரத்தில் பள்ளிகொண்டா காவலர் குடியிருப்பில் கைப்பற்றியிருந்த பொருட்களை காண்பித்து விசாரணையை தொடங்கினார்.

மேற்படி விசாரணையின்போது, எதிரி மார்ட்டின் பிரேம்ராஜ் என்பவர் எனக்கு ஏதும் தெரியவில்லை, நான் மனக்குழப்பத்தில் உள்ளேன், நான் எனது பொண்டாட்டி பிள்ளைகளை விட்டு 1 ½ மாத காலமாக வெளியில் சுற்றி வருகிறேன், இந்த வழக்கிற்கும், எனக்கும் தொடர்பு இல்லை, இந்த வழக்கில் நான் விசாரணை அலுவலர் இல்லை என சொல்வதையே சொல்லினார்.

மேற்படி புலன்விசாரணையின்போது, வாய்மொழி மூலமாக கேட்கப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும், மேற்படி பதிலையே மீண்டும், மீண்டும் கூறியுள்ளார். மேலும் எழுத்துமூலமாக அளிக்கப்பட்ட கேள்விகளுக்கு, எவ்வித பதிலையோ எழுத்துமூலமாக அளிக்க மறுத்துவிட்டார். மேற்படி புலன்விசாரணையின்போது, நானும், வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளர் தேவராஜ் என்பவரும் உடனிருந்தோம்.

என்னிடம் காண்பிக்கப்படும் ஆவண எண்.30 மார்ட்டின் பிரேம்ராஜ் அவர்களின் விசாரணை அறிக்கையில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். அந்த விசாரணை அறிக்கை அ.சா.ஆ.46. மேலே உள்ள கையொப்பம் வேலூர் வடக்கு வருவாய் ஆய்வாளர் தேவராஜ் என்பவரின் கையொப்பம் ஆகும்.

பள்ளிகொண்டா காவலர் குடியிருப்பில் கைப்பற்றப்பட்ட பொருட்களான டைரி 2, நோட்புக் 2, முனிராஜீலு மற்றும் மணி என்பவரின் முச்சலிக்கா, ரெட் கலர் மொபைல் போன், சிம்கார்டு 4, மெமரி கார்டு 1, பென்டிரைவ் 2, ஆகியவற்றை காண்பித்து DSP விசாரணையை மேற்கொண்டார்.

அவைகள் தான் இந்நீதிமன்றத்தில் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ.42 முதல் அ.சா.ஆ.45 ஆகும். சா.பொ.1 முதல் சா.பொ.5 வரை உள்ள பொருட்களை காவல்துணை கண்காணிப்பாளர், 1ம் எதிரி மார்ட்டின் பிரேம்ராஜிடம் காண்பித்து அந்த பொருட்களை அவருடைய வீட்டிலிருந்து விசாரணையில் கைப்பற்றப்பட்டதாக காட்டி வினவியபோது அதற்கு அவர் தெரியாது என சொன்னார்.

என்னை CBCID DSP விசாரணை செய்தார்.

1 மற்றும் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் M.A. வரலாறு படித்துள்ளேன். என்னுடைய Controlling authority வேலூர் வட்டாட்சியர். இந்த தகவல் சொன்னதை என்னுடைய அலுவலக ஆவணங்களில் நான் குறிப்பிடடுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி புலன்விசாரணையில் நான் சாட்சியாக இருக்க எழுத்துமூலமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை.

தேவராஜ் என்பவரை எனக்கு இதற்கு முன்னர் பழக்கம் உள்ளதா என்றால் அலுவல் நிமித்தமாக பழக்கம். எனக்கும், தேவராஜ்க்கும் ஏற்கனவே அறிமுகம் உண்டு என்பதை நான் CBCID போலிசாரிடம் சொல்லவில்லை.

என்னிடம் காண்பிக்கப்பட்ட பொருட்கள் பள்ளிகொண்டா காவலர் குடியிருப்பில் இருந்து கைப்பற்றப்பட்டதா என்பது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. எத்தனை எண்கள், எத்தனை டைரி, எத்தனை செல்போன் என்று எண்கள் வாரியாக நான் CBCID அதிகாரியிடம் கூறினேன். அதை அவர்கள் எழுதிக்கொண்டார்களா என்று எனக்கு தெரியாது. முதலில் கையால் எழுதினார்கள். அதில் நான் கையொப்பம் போடவில்லை. கையால் எழுதிய பிறகு நான் அங்கேயே தான் இருந்தேன்.

விசாரணை அதிகாரி என்னை விசாரித்து கையால் எழுதிக்கொண்ட வாக்குமூலத்தில் கைப்பற்றப்பட்ட பொருட்களின் எண்களை குறித்தோ, மற்ற தகவலை குறித்தோ என்ன எழுதியிருக்கிறது என்று நான் படித்துப் பார்க்கவில்லை. படித்துப் பார்ப்பதற்காக கொடுங்கள் என்று நான் கேட்கவும் இல்லை எழுத்துமூலமாக கொடுத்ததில் மட்டும் நான் கையெழுத்து போட்டேன்.

என்னுடைய குவிமுச பிரிவு 161 வாக்குமூலத்தில், எத்தனை டைரிகள், எத்தனை செல்போன், எத்தனை சிம்கார்டு, எத்தனை மெமரி கார்டு, எத்தனை பென் டிரைவ் என்ற தகவல்கள் அதில் இல்லை என்றால் சரிதான்.

போலிசாரும், சிறப்பு அரசு வழக்கறிஞர் தரப்பிலும் சொல்லிக் கொடுத்தது மாதிரி பொருட்களின் எண்ணிக்கையை குறிப்பிட்டு என்னுடைய குவிமுச பிரிவு 161 வாக்குமூலத்தில் இல்லாததை கூறி இந்நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிறப்பு அரசு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதின்பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**2 முதல் 4 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 6 எதிரிகளின் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்.

**5ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

வருவாய் துறையில் என்னை விசாரணைக்கு செல்லவேண்டும் என்ற உத்தரவு எதையும் என்னை விசாரணை செய்த விசாரணை அதிகாரியிடம் கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. அதனால் அதை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தான் இந்த வழக்கில் விசாரணை அலுவலர் இல்லை என்று 1ம் எதிரி சொன்னார் என்றால் அவர் அவ்வாறு தான் கூறினார்.

விசாரணை முடிந்த பிறகு உயர் அதிகாரிகளுக்கு அதுகுறித்து அறிக்கை தெரிவித்தேனா என்றால் இல்லை. அதுகுறித்து தகவல் தெரிவித்தேன். இந்த வழக்கு சட்டம் ஒழுங்கு தொடர்புடையதாகும் என்றும், எதிரியானவர்கள் அனைவரும் shadow duty ஸ்பெஷல் பார்ட்டி வேலை என்பதால் அவர் மூலமாக இந்த குறிப்பிடப்பட்ட அனைத்து பொருட்கள் அனைத்தும் கோவிந்தராஜிக்கு சம்மந்தப்பட்டது என்றும், எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

PERUMALSAMY MURUGAN

Digitally signed by PERUMALSAMY MURUGAN
Date: 2025.01.27 15:54:27 +0530